இதயம் நொந்து அழுகிறோம் எங்கே மாமா 2
இனி இல்லை நீங்கள் என்பது உண்மை தானா 2
முகம் காண துடிக்கிறோம் எங்கே மாமா 2
உங்கள் குரல் காற்றில் கேட்கிறதே தமிழசெல்வன் மாமா 2
இதயம் நொந்து அழுகிறோம் எங்கே மாமா
இனி இல்லை நீங்கள் என்பது உண்மை தானா

விடிகாலை நேரமதில் குண்டு வீழ்ந்ததோ
உங்கள் அழகான பொன் சிரிப்பு கொண்டு போனதோ 2
இடி விழுந்த தமிழர் நெஞ்சம் வெந்து சாவதோ 2
இனி இன்னொருநாள் உன் முகத்தை எங்கு காண்பதோ 2
இதயம் நொந்து அழுகிறோம் எங்கே மாமா
இனி இல்லை நீங்கள் என்பது உண்மை தானா

நேற்று இங்கு வந்து போன உங்கள் ஞாபகம்
எங்கள் நெஞ்சிருந்து கொல்லுதேய்ய என்ன காரணம் 2
அமைதி தேடி உலகமெல்லாம் அலைந்து திரிந்தாய் 2
இன்று அமைதியாகீ கூடு விட்டு எங்கு பறந்தாய் 2
இதயம் நொந்து அழுகிறோம் எங்கே மாமா
இனி இல்லை நீங்கள் என்பது உண்மை தானா

வெள்ளி காலை வேளையிலே சேதி வந்தது
நீங்கள் சிறகிழந்து வீழ்ந்த கதை சொல்லிப்போனது 2
உள்ளம் நொந்து உணர்விழந்து துடித்தோமையா 2
உன்னை தினம் தினமும் நெஞ்சினிலே நினைத்தோமையா 2
இதயம் நொந்து அழுகிறோம் எங்கே மாமா
இனி இல்லை நீங்கள் என்பது உண்மை தானா 2